**செய்தி வெளியீட்டு எண்**:560 **நாள்**:29.8.2009

# பரங்கிமலை இரயில் நிலையத்தில் ஆவின் பாலகம் திறக்கப்பட்டது

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு உ. மதிவாணன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு தா.மோ. அன்பரசன் அவர்கள் இன்று 29.08.2009 காலை பரங்கிமலை இரயில் நிலையத்தில் ஆவின் நிறுவனம் அமைத்துள்ள ஆவின் பாலகத்தைத் திறந்து வைத்தார். முதல் விற்பனையை மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு உ. மதிவாணன் அவர்கள் தொடங்கிவைத்தார். ஆவின் நிறுவனம் இரயில் பயணிகளுக்கு நல்ல தரமான பால்பொருட்கள் கிடைக்கும் பொருட்டு சென்னை எழும்பூர், சென்னை சென்ட்ரல், சென்ட்ரல் புறநகர், திருவள்ளூர் மற்றும் தாம்பரம் இரயில் நிலையங்களில் ஏற்கனவே ஆவின் பாலகங்களை திறந்துள்ளது என்பது குறிப்பிடதக்கது.

பரங்கிமலை இரயில் நிலையத்தில் தொடங்கப்பட்ட ஆவின் பாலகத்தில் ஆவின் பொருட்களான சூடான பால், சுவையூட்டிய நறுமணப்பால், பால் பவுடர், பாதாம்மிக்ஸ் பவுடர், டெட்ராமில்க், மோர், ஆவின் ஐஸ்கிரீம், பால்கோவா, வெண்ணெய், நெய், குலோப் ஜாமூன், லஸ்ஸி, யோகர்ட் ஆகியவை விற்பனை செய்யப்படும்.

இந்த நிகழ்ச்சியில் பால்வளத்துறை ஆணையர்/ ஆவின் நிர்வாக இயக்குநர் திரு அபூர்வ வர்மா, இ.ஆ.ப., தென்னக இரயில்வே கோட்ட வர்த்தக மேலாளர் திரு கே.வி.வரதராஜன், ஆலந்துர் நகராட்சித் தலைவர் எ.துரைவேலு, துணைத்தலைவர் திரு என்.சந்திரன், மன்ற உறுப்பினர் திரு இராமமூர்த்தி, பால்வளத்துறை துணைப்பால் ஆணையர் திரு எம். ரவிக்குமார், ஆவின் இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் என். சுப்பையன், பொது மேலாளர்(விற்பனை) திரு எஸ்.கே.கதிர்வேலு மற்றும் ஆவின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டார்கள்.

நுகர்வோர்கள் தங்கள் புகார் மற்றும் ஆலோசனைகளைத் தெரிவிக்க 24 மணி நேர நுகர்வோர் நலன் மற்றும் சேவை பிரிவை தொலைபேசி 1800–425–3300 (இலவச சேவை) என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். அல்லது e,mail,aavincomplaints@gmail.com தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்

*****************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை.